## மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை– 4–4–2012

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தங்க மணி விளக்கு! ஏழை எளியோர் இதயமெல்லாம் மகிழ்ச்சி பொங்க வைக்கும் எங்கள் குல விளக்கு! ஒன்றரைக் கோடி தொண்டர்களை உயிர்த் துடிப்புடன் இயங்க வைக்கும் கழகத்தின் இதயத் துடிப்பு! மைனாரிட்டி தி.மு.க.வின் தாழ்ச்சி மிக்க சுயநல ஆட்சியால், வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சியூட்டி விசையொடிந்த நிருவாகத்தை நிமிர்த்துக் காட்டி, நெறி புரண்ட காவல் துறையை நேராக்கி, நிலை குலைந்த நிதி நிலையைச் சீராக்கி, துறைகள் தோறும் செயல்திறனைக் கூராக்கி, மக்கள் நலம் பேணி, மக்கள் நலம் காத்து, மக்கள் நலம் போற்றி, மக்களுக்காக மக்களாட்சி நடத்தும் மக்கள் தலைவி! மக்கள் போற்றும் மகத்தான தலைவி! தெய்வ சக்தியின் ஆசியோடு, மக்கள் சக்தியின் துணையோடு, வெற்றி மேல் வெற்றியே பெறும் வெற்றித் தாயின் செல்ல மகள், தமிழகத்தின் வெற்றித் திருமகள்! சவால் விடும் எதிர்க்கட்சிகள், சினம் கொண்ட சிங்கத்தின் முன் நிற்கும் தகுதி படைத்த மதங் கொண்ட யானைகள் அல்ல! அவை மருண்டோடும் குள்ள நரிகளே–– நிரூபித்துவிட்டுப் போய்க்கொண்டிருக்கின்றனர்––என நிரூபித்துக் காட்டிய வீரத்தின் விளைநிலம்! பூகோளப் பாடத்தில் வேண்டுமானால் இந்தியாவின் தலை நகர் டெல்லி என்று இருக்கலாம்! ஆனால், அரசியல் வரைபடத்தில் இந்தியாவின் தலைநகர் இனி சென்னையே! இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போவது எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே என உலகமே எதிர்நோக்கும் உன்னத தலைவி, உத்தமத் தலைவி! எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களை வணங்கி, எனது பதிலுரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் நாள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தோம். அதற்குப் பிறகு, ஏழு மாத இடைவெளியில் இரண்டாவது நிதிநிலை அறிக்கையை கடந்த 2012 மார்ச் மாதம் 26 ஆம் நாளன்று பாரம்பரியம் மிக்க இந்தப் பேரவையில் தாக்கல் செய்துள்ளோம்.

தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் மகத்தான வெற்றியைப் பெற்று 16.5.2011 அன்று ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, மக்களுக்கு தேர்தல் சமயத்தில் அளித்த பல்வேறு வாக்குறுதிகளை திட்டங்களாகத் தீட்டி, முதல் நிதிநிலை அறிக்கையிலேயே வழங்கியுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். செயல்படுத்த முடியாத திட்டங்கள் என்று ஒரு சிலரால் கூறப்பட்ட பல திட்டங்களுக்குக்கூட செயல்வடிவம் கொடுத்து வெற்றிகரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள் என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது இரண்டாம் முறையாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சிறப்பின் சிகரமாக 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாளன்று இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

ஆயிரம் காடுகளை உருவாக்கும் ஆற்றல் ஒரு விதையில் இருக்கிறது. ஆயிரம் நன்மைகளை உருவாக்கும் ஆற்றல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் மட்டும்தான் இருக்கிறது என்பதை இந்த உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்த நிதி நிலை அறிக்கை அமைந்துள்ளது.

தமிழக அரசின் இந்த நிதி நிலை அறிக்கை குறித்து பல்வேறு செய்தித்தாள்கள் சிறப்பாக செய்திகளை வெளியிட்டுள்ளன. இந்த நிதி நிலை அறிக்கை பற்றி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், வல்லுநர்கள், தொழில் கூட்டமைப்புகள் என பல்வேறு தரப்பினரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை தந்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் உருவாக்கப்பட்டு அவர்களது நல்லாசிகளோடு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை நாடு பாராட்டிக்கொண்டிருக்கிறது. நல்லவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாணவர்கள், மீனவர்கள், விவசாயிகள், நெசவாளிகள், அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள், பொருளாதார வல்லுநர்கள், தொழிலாளர்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், காவல் துறையினர், தமிழ் அறிஞர்கள், இலங்கை அகதிகள், தாய்மார்கள் இளைஞர்கள், முதியோர் என்று எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், தொழில் துறையில் முன்னேற்றம், விவசாயத்தில் வளர்ச்சி, கல்வியில் மேம்பாடு, வேலைவாய்ப்பில் முன்னுரிமை நீர்வள பெருக்கம், குடிநீர் பாதுகாப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு, புதிய சாலைகள் அமைப்பு, உணவுப் பாதுகாப்பு, மின் உற்பத்திக்குத் தனி கவனம், தீயணைப்பு மீட்புப்பணியில் தீவிரம், காவல் துறைக்குக் கம்பீரம், திருக்கோவில் புனரமைப்பு, கோவில்களில் அன்னதானம் என்று அறிவிக்காத திட்டங்களே இல்லை. அரசு ஊழியர்களுக்கும், விவசாயிகளுக்கும் கடன் உதவி, கூட்டுறவில் வீட்டுக் கடன் பெற்றவர்களுக்கு வட்டி நிவாரணம் போன்ற பால்வார்க்கும் திட்டங்களுக்கும் பஞ்சமே இல்லை.

குழந்தை அழுதால் துடிக்கின்ற தாய்போல

- தமிழன் அழுதால் துடிக்கின்ற தாயாக (மேசையைத் தட்டும் ஒலி)

–தமிழகம் தாழ்ந்தால் தவிக்கின்ற தாயாக

–தமிழகத்தை தலைநிமிர வைக்கின்ற தாயாக

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பது இந்த நிதிநிலை அறிக்கை மூலம் நிரூபணமாகிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் குறை ஏதும் காண முடியாத நிலையில், ஒரு சிலர் மட்டும், ஏதாவது குறை கூறியாக வேண்டுமே என்ற அரசியல் காரணங்களுக்காக சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 28 ஆம் தேதி முதல் இம்மாமன்றத்தில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு நேற்று வரை 37 பேர்களும், இன்று 3 பேர்களும் ஆக மொத்தம் 40 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவரும் சில கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கின்றார். நிதிநிலை அறிக்கை மீது தங்களது ஆக்கப்பூர்வமான கருத்துகளைத் தெரிவித்த அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களது அரசு மக்களுக்கு அளித்த பெரும்பாலான வாக்குறுதிகளை ஏற்கெனவே நிறைவேற்றியுள்ள நிலையில், மாநிலத்தை உறுதியான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் நோக்குடன் இந்த இரண்டாவது நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு கவனமுடன் வகுத்து அளித்துள்ளோம்.

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கம் Faster, Sustainable and More Inclusive Growth என்பதுதான். அதாவது துரிதமான, நீடித்து நிலைக்கக்கூடிய, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய விரிவான வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதுதான் நமது நோக்கம்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த நிதிநிலை அறிக்கையும் வகுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2012 மார்ச் திங்கள் 22 ஆம் நாளன்று தமிழகத்தின் தன்னிகரற்ற தனிப்பெரும் திட்டமான “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023''—ஐ வெளியிட்டுள்ளார்கள்.

இத்திட்டம், ஏதோ சம்பிரதாயத்திற்காக வடிவமைக்கப்பட்ட திட்டம் அல்ல. தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றியமைக்கவும், துரிதமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தெளிந்த சிந்தனையில் வகுக்கப்பட்ட திட்டம்தான் தொலைநோக்குத் திட்டம் 2023.

தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்க வேண்டும். வேறு மாநிலங்களுக்கெல்லாம் முன்னிலையில் தமிழகத்தை நிறுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உருவான உன்னதமான லட்சியத் திட்டம்தான் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023.

ஆனால், இந்த இலட்சியத்துடன் செயல்படுவதை திரு. கருணாநிதியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த மன எரிச்சலில் தொலைநோக்குத் திட்டத்தை, பூஜ்யத்தில் ஒரு இராஜ்யம் என்று ஏகடியம் செய்திருக்கிறார். திரு. கருணாநிதி நாட்டு அரசியலைக் கண்டு கொள்ளாமல், வீட்டு அரசியலில் கவனம் செலுத்தியதால், போணியாகாத திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதி முன்காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்த காரணத்தால், "வில்வப் பழம் தின்பார் பித்தம் போக, பனம்பழம் தின்பார் பசி போக" என்ற கதையாக பரவசமான பாராட்டு விழாக்களில் மட்டுமே மனம் லயித்து அனுபவித்துக்கொண்டிருந்த காரணத்தால், தமிழகத்தின் முன்னேற்றம் பற்றியோ, தமிழர்களின் நலன் பற்றியோ, சிறிதும் கவனம் செலுத்தாமல் தமிழ்நாட்டையே பூஜ்ஜியமாக்கி விட்டார். அதனால் அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மீண்டும் பூஜ்ஜியத்தை ராஜ்ஜியமாக்கும் பொறுப்பை மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் தந்தார்கள். பூஜ்ஜியத்தில் இருந்துகொண்டு ராஜ்ஜியத்தை ஆள்பவன் என்று இறைவனைத்தான் சொல்வார்கள். அந்த இறைவனின் பரிபூரண அருளைப் பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பூஜ்ஜியத்தை வைத்து ஒன்றை பத்தாகவும், பத்தை நூறாகவும், ஆயிரமாகவும், இலட்சமாகவும், கோடியாகவும் மாற்றும் வல்லமை பெற்றவர். எனவே, கஜானாவை காலியாக்கி கருணாநிதி ஏற்படுத்திய பூஜ்ஜியத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் ராஜ்ஜியமாக மாற்றுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023—ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளையும், அதை எட்ட வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளையும் பரிசீலித்து, படிப்படியாக எண்ணற்ற திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் நிறைவேற்றப்பட உள்ளன. அவற்றில், ஒருசில அம்சங்களை நமது வரவு செலவுத் திட்டத்திலும் கொண்டு வந்துள்ளோம்.

இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின் முக்கியமான நோக்கம் தமிழகத்தை வறுமையற்ற மாநிலமாக ஆக்குவதே. இவ்வாறு வறுமையற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றியமைக்க வேண்டும் எனில், inclusive growth, அதாவது அனைவரையும் உள்ளடக்கக்கூடிய வகையில் பொருளாதார வளர்ச்சி எட்டப்பட வேண்டும். அதற்கு நன்கு வடிவமைக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்; வேலைவாய்ப்பை

பெருக்கக்கூடிய வகையில் தொழில் துறை, விவசாயம் போன்ற முதன்மைத் துறைகளின் வளர்ச்சி வலுப்படுத்தப்பட வேண்டும்; கல்வி, சுகாதாரம் போன்றவை மேம்படுத்தப்படவேண்டும்; படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்; உடல் நலம் குன்றியோர், வேலை செய்ய இயலாதவர், புறக்கணிக்கப்பட்ட முதியோர், வருமானம் ஈட்ட முடியாத மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களின் வாழ்வாதார பாதுகாப்பிற்காக சமூக பாதுகாப்பு திட்டங்களின்மூலம் போதிய உதவித் தொகை வழங்கப்படவேண்டும்; இவற்றை எல்லாம் இந்த நிதி நிலை அறிக்கை தாங்கி வந்துள்ளது என்பதை இங்கே மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

உதாரணமாக, கிராமப்புறங்களில் சிறப்பாக செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு திட்டங்களைப் போன்று, 200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் புதியதாக தொடங்கப்படவுள்ள நகர்ப்புர வாழ்வாதாரத் திட்டம்; மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் சரிநிகர் வளர்ச்சியை எட்ட 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் புதியதாக தொடங்கப்படவுள்ள மாநில சரிநிகர் வளர்ச்சி நிதித் திட்டம்; மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக 206 கோடி ரூபாய் ஒதுக்கீடு; இளைஞர்களிடையே தொழில் திறனை வளர்க்க திறன் வளர் பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு; ஏழைகள் உடல் நலம் பேண முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவ காப்பீட்டுத் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு; முதியோர், விதவைகள், போன்ற ஆதரவற்றவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக மாதாந்திர உதவித் தொகை 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு, இதுவரை இல்லாத அளவாக 2012–13 ஆம் நிதியாண்டில் 3,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு; இப்படி வறுமையை ஒழிப்பதற்கான பல்வேறு கூறுகளை ஆராய்ந்து அவற்றை சீர்செய்யும் நோக்குடன் திட்டங்களை கவனமுடன் வகுத்துள்ளோம். சமூகத்தில் பின்தங்கிய மக்களை வளர்ச்சிப்பாதையில் ஒருங்கிணைக்க ஆதி திராவிட துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, முன் எப்போதும் இல்லாத அளவாக, மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 21.82 சதவீதமாக அதாவது 6,109 கோடி ரூபாய் ஒதுக்கீடு;

பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 1.25 சதவீதமாக 349 கோடி ரூபாய் ஒதுக்கீடு; பழங்குடியினருக்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒரு புதிய மேம்பாட்டுத் திட்டம்; ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை என பல்வேறு திட்டங்களை இங்கே எடுத்துச் சொல்லமுடியும். ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், இதுவரை எந்த அரசும் செய்யாத அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் சமூக பொருளாதார நிலையில் உயர்ந்திட வேண்டும், அனைத்து வகையிலும் அவர்கள் மேம்பட்டு நிற்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, சென்ற ஆட்சியில் வேறு திட்டங்களுக்கு திருப்பிவிடப்பட்டதாக இங்கே மாமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது தலைமையிலான இந்த அரசு ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கும் நிதியின் முழு பயனும் ஆதி திராவிடர்களையே சென்று அடைவதை உறுதி செய்யும். ஆதி திராவிடர் நலனுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது அரசு உரிய முக்கியத்துவம் வழங்கும் என்பதற்கு, ஆதி திராவிடர் துணைத் திட்டத்தில் 2010–11 ஆம் ஆண்டில், அதாவது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 19 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், 2012–2013 ஆம் ஆண்டில் 21.82 சதவிகிதம் ஒதுக்கியுள்ளதே சான்றாகும். இவையெல்லாம், பொருளாதார வளர்ச்சியில் ‘Inclusive Growth’ என்று

சொல்லப்படுகின்ற அனைவரையும் உள்ளடக்கிய, அனைவரும் பயன்பெறத்தக்க வளர்ச்சியை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் முதன்மைத் துறையின் வளர்ச்சிக்கு மிகுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயம், கால்நடைத் துறை, மீன்வளம், வன வளம், கூட்டுறவு, நீர்வளம் போன்ற துறைகளை உள்ளடக்கிய முதன்மைத் துறைக்கு மொத்தமாக 2010–11 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு, அதாவது தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியில் 2010–11 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒதுக்கிடு 5,674.27 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், 2012–13 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இதற்கான ஒதுக்கீடு 9,942.25 கோடி ரூபாய் என்பதையும், இது 2010–11 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டைக் காட்டிலும் 75 சதவீதம் கூடுதல் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கட்டமைப்பு மேம்பாட்டுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023', தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார கட்டமைப்புகளை மேம்படுத்தி, வேகமான வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் தீட்டப்பட்ட ஒரு திட்டமாகும். தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தில் அடுத்த 11 ஆண்டுகளில், 15 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கட்டமைப்புக்கு முதலீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துவிட்டு, இந்த நிதி நிலை அறிக்கையில் 1,000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது என சில மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023', பதினொரு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமாகும். இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விரிவானதொரு அறிக்கையை இந்த மாமன்றத்தில் அளித்து, எப்படி இந்த முதலீடுகள் திரட்டப்படும் என்பது குறித்து எழுப்பப்பட்ட சந்தேகங்கள் அனைத்திற்கும் விளக்கம் அளித்துள்ளார்கள்.

இன்று தமிழகத்தில் முக்கிய பிரச்சனையாக கருதப்படும் மின் பற்றாக்குறையை சீர்செய்ய மின் வசதியை மேம்படுத்துவது போன்ற திட்டங்களுக்குத்தான் இந்தத் தொலைநோக்குத் திட்டத்தில் கூட 4.5 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட உள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இந்த முதலீடு, அரசு மூலமாக மட்டுமல்லாது, அரசு–தனியார் பங்களிப்பு, மத்திய அரசு முதலீடு, தனியார் முதலீடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும். தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை நோக்கங்களை எட்டுவதற்காக விரைவிலேயே புதிய திட்டங்கள் கொண்ட தொகுப்பு அறிக்கை வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும்போது, தற்போது தொடக்கமாக ஒதுக்கப்பட்ட இந்த 1,000 கோடி ரூபாய் போதாது என்றால், மேலும் எவ்வளவு நிதி தேவையோ அத்திட்டங்களுக்கேற்ப அவற்றை ஒருங்கிணைத்து ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தயாராகவே உள்ளது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இந்த நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விவரங்களை மீண்டும் இங்கே குறிப்பிட்டுக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் தாம் முன்னிறுத்திய இந்தப் பணிகள் அனைத்தையும் செய்து முடிக்கவல்லது என்பதை இது தெளிவுபடுத்தும். தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்திற்கு தொடக்க நிதியாக 1,000 கோடி ரூபாய்; நெடுஞ்சாலை துறைக்கு 5,251 கோடி ரூபாய்; 3,000 புதிய நகரப் பேருந்துகள் வாங்க 545 கோடி ரூபாய்;

மோனோ ரயில் திட்டம்; மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய்; தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு 1,500 கோடி ரூபாய் பங்கு மூலதனம்; மின் பகிர்மான வசதிகளை மேம்படுத்த 3,573 கோடி ரூபாய்; நகர்புறங்களில் ஏழை நடுத்தர மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்த தளப்பரப்பளவு குறியீடு (FSI relaxation) தளர்த்தும் திட்டம்; 750 கோடி ரூபாய் செலவில் கிராமப்புறங்களில் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்தும் THAI திட்டம்; 1,250 கோடி ரூபாய் செலவில் இரண்டு நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்கள்; மதுரை நகரில் கட்டமைப்பை மேம்படுத்த 250 கோடி ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு; என பல்வேறு திட்டங்களை இங்கே குறிப்பிடலாம்.

அடுத்து, நிதி மேலாண்மை. சிறந்த நிதி மேலாண்மைமூலம் அரசின் நிதி நிலையை உறுதிப்படுத்த பல்வேறு முயற்சிகளை இந்த நிதிநிலை அறிக்கை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசும், பல்வேறு மாநில அரசுகளும் நிதிநிலைக் குறியீடுகளை பின்பற்ற இயலாமல் தடுமாறி வரும் நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி நிலையில் ஒரு வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ள இந்த முயற்சி ஒரு வெற்றிப் பாதையின் தொடக்கம்தான். இங்கே கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் அரசு கடன் வாங்கக் கூடாது என்றும், நிதிப் பற்றாக்குறை உள்ளது என்றும் குறைகூறி பேசியுள்ளார்கள். மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் ‘Deficit Financing’ என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தூண்டிவிடக்கூடிய ஓர் உன்னத கருவி என்று உலகப் புகழ்மிக்க பொருளாதார மேதைகள் எல்லாம் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், வளர்ச்சிப் பொருளாதாரத்தின் நிபுணராக கருதப்படும் J.M.Keynes அவர்களும் 'Deficit Financing' முறையை கையாளவேண்டும் என்றும், குறிப்பாக, பொருளாதாரம் மந்தமான நிலையில் இருக்கும்போது கையாளப்படவேண்டிய முக்கிய வழிமுறை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இதை சுருக்கமாக சொல்லவேண்டுமென்றால் நம்மிடம் நிதி இல்லை என்பதற்காக ஒரு முக்கிய சாலையைப் போட முடியவில்லை என்றால், 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் கழித்து நிதி ஆதாரம் கிடைக்கும்போது அந்த சாலையைப் போட்டால், பொருளாதார வளர்ச்சி அத்தனை ஆண்டுகள் பின்நோக்கி சென்றுவிடுகிறது. மேலும் 10 ஆண்டுகள் கழித்து சாலை போடும்போது அதன் செலவு பன்மடங்கு உயர்ந்துவிடும். கடன் பெற்றாவது அந்த சாலைப் பணியை உடனே நிறைவேற்றிவிட்டால் 10 ஆண்டுகள் கழித்து 100 கோடி ரூபாயில் போடப்படுகின்ற அந்தச் சாலையை, 10 கோடி ரூபாய் செலவிலேயே இப்போது போட்டுவிட முடியும். அதுமட்டுமல்ல, அந்தச் சாலையை இப்போது போடுவதால் அப்பகுதியில் தொழிற்சாலைகள் பெருகி, பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, வேலைவாய்ப்பும் பெருகும். அரசின் வரி போன்ற வருவாய் வரவுகளும் கூடும். இதனால் ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச்சியால் அரசு பெறும் கூடுதல் வருவாயைக் கொண்டே இந்தக் கடனையும் அடைத்துவிட முடியும். இதுதான் deficit financing-ல் அடங்கியுள்ள தத்துவமும் கூட.

எனவே, நிதி பற்றாக்குறையை மோசமான ஒன்றாக கருத தேவையில்லை. ஆனால், அந்த நிதிப் பற்றாக்குறை என்பது அளவோடு இருக்க வேண்டும். வருவாய் பற்றாக்குறையையும், நிதிப் பற்றாக்குறையையும் சிலர் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல நிதி நிர்வாகத்திற்கு

வருவாய் பற்றாக்குறை இருக்கக்கூடாது. நிதிப் பற்றாக்குறை அளவோடு இருக்கலாம். தேவையான அளவிற்கு மட்டும் கடன் பெற்று, அந்த நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்து கொள்ளலாம். கடனும் அளவாகப் பெறவேண்டும். அவ்வாறு திரட்டப்படும் கடன் மூலதனப் பணிகளுக்காக மட்டுமே செலவிடப்படவேண்டும். ஆரோக்கியமான பொருளாதாரத்திற்கு உகந்த இந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் சிறந்த நிதி மேலாண்மையைக் கடைப்பிடித்து மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுகிறது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், அதேசமயம், மாநில வளர்ச்சிக்கு அரசின் நிதிநிலை வலுப்படுத்தப்படவேண்டும். இதுகுறித்து பல்வேறு அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நான் இப்போது கூறப்போகின்ற விவரங்களை மிகுந்த கவனமுடன், உன்னிப்பாக கேட்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் – 2010–2011 ஆம் ஆண்டில் 2,729 கோடி ரூபாயாக இருந்த வருவாய் பற்றாக்குறை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 2012–2013 ஆம் ஆண்டில் 2,376 கோடி ரூபாய் வருவாய் உபரி நிலையை எட்டும். இதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி மேலாண்மையைக் கடைபிடித்து, நிதி நிர்வாகத்தை திறமையாக நடத்தி செய்துள்ள சாதனை என்பதை மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிப் பற்றாக்குறை அளவு, மாநில உற்பத்தி மதிப்பில்––அதாவது கடந்த தி.மு.க. ஆட்சியில் 2010–2011 ஆம் ஆண்டில், 3.21 சதவீதம் என்பது 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 2.87 சதவீதமாகக் குறைக்கப்படும்; அரசு செலுத்த வேண்டிய வட்டி, மாநில வருவாய் வரவில் 2010–2011 ஆம் ஆண்டில், 11.98 சதவீதத்திலிருந்து 2012–2013 ஆம் ஆண்டில், 10.88 சதவீதமாகக் குறையும்; மாநில அரசு 20,716 கோடி ரூபாய் வரை நிகர கடன் பெறலாம் என்று இருந்தால்கூட 2012–2013 ஆம் ஆண்டில் 18,387 கோடி அளவிலேயே நிகர கடன் கட்டுப்படுத்தப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் கூட இதுபற்றி குறிப்பிடும்போது 20,716 கோடி ரூபாய் வரை கடன் பெறலாம் என்றுதானே உள்ளது...

அதுவரை பெற வேண்டும் என்பது இல்லையே என்று குறிப்பிட்டிருந்தார். அதே சமயம், அவருடைய கட்சித் தலைவர் வருவாய் உபரி இருக்கும் நிலையில் ஏன் புதிய வரிகளை விதிக்கவேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார். 1500 கோடி ரூபாய்க்கு கூடுதல் நிதி திரட்டப்பட்டதால்தான் இந்த வருவாய் உபரி ஏற்பட்டுள்ளது.

இந்த வருவாய் உபரி ஏற்பட்டதால்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடன் பெறுவதைக் குறைக்க முடிகிறது. வருவாய் உபரி அதிகரிக்க அதிகரிக்க, கடன் அளவையும் கட்டுப்படுத்தி, மூலதன செலவுகளையும் அதிகப்படுத்த இயலும்.

மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவும் கடந்த ஆண்டுகளை விட குறைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மாநிலத்தின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளேயாகும் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் 1500 கோடி ரூபாய்க்கு கூடுதல் வரி என்று இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தார்கள். இவை சாமானிய மக்களை பாதிக்கக்கூடிய வரிகள் அல்ல.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தினமணி நாளிதழ், ‘‘சாதாரண மக்களுக்கு சுமை கூட்டும்படியான எந்த வரிவிதிப்பும் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை’’ என்று தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறை சொல்ல வேண்டும் என்பதற்காகவே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு.சிவசங்கர் ‘‘இந்த நிதிநிலை அறிக்கை தறிகெட்ட வரிக் குதிரையாக ஓடிக்கொண்டிருக்கிறது’’ என்று சொன்னார். உண்மையில் மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிதி நிலை அறிக்கைகள்தான் தறி கெட்ட குதிரைகளாக ஓடிக்கொண்டிருந்தன என்பதை அவர் மறந்துவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக் கோட்டை அதிபதி ராஜா தேசிங்கை நீங்கள் மட்டுமல்ல, யாருமே மறந்திருக்க முடியாது. டில்லி பாதுஷா ஷா ஆலத்தின் அடக்க முடியாத முரட்டுக் குதிரையை அடக்கிக் காட்டிய ராஜா தேசிங்கின் பெயரைச் சொன்னாலே நமது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருமுகம் தான் தமிழக மக்களின் நினைவுக்கு வரும். அந்த ராஜா தேசிங்கு எம்.ஜி.ஆரின் ஒரே அரசியல் வாரிசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியின் நிர்வாகச் சீர் கேட்டால் தறி கெட்ட குதிரையாக ஒடிய தமிழகத்தின் நிதி நிலையைத் தடுத்து நிறுத்தி, சரிப்படுத்தி, முறைப்படுத்தி, முறையான நிதி நிலை அறிக்கையை இந்த அவையிலே சமர்ப்பிக்க வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தறி கெட்ட குதிரைகளை மட்டும் அல்ல, அரசியல் நெறி கெட்ட குதிரைகளையும் அடக்கி ஆண்டுகொண்டிருக்கிறார் என்பதை திரு.சிவசங்கர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கை பற்றி பல்வேறு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. Deccan Chronicle பத்திரிகை இந்த வரவு செலவுத் திட்டத்தை “Chief Minister puts Tamil Nadu on progress path”, அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் செலுத்துகிறார் என குறிப்பிட்டுள்ளது.

மேலும் அதே பத்திரிகை “Social welfare, infrastructure gets thumps up”, அதாவது சமூகநலம், கட்டமைப்பு, முக்கியத்துவம் பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டு, இந்த நிதி நிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்கள் பற்றியும் கருத்துகளை வெளியிட்டுள்ளது.

அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில், குறிப்பாக சொல்ல வேண்டுமானால், வேலை வாய்ப்பை செயல்படுத்த உள்ள திட்டம் பற்றி “Skilled development gets budget push” என்றும், குடிசைகளுக்கு CFL பல்புகள் வழங்குவது பற்றி ‘‘Blue print to save energy” அதாவது, மின் சக்தியை சேமிக்க ஒரு வரைவுத் திட்டம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

Times of India வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் ‘‘Tight finances and an eye on growth are at the heart of Tamil Nadu’s budget” என்றும், “gateway to growth” அதாவது, வளர்ச்சிக்கு ஒரு நுழைவுவாயில் என்றும் குறிப்பிட்டுள்ளது.

நிதி நிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள பல்வேறு திட்டங்களில் LIG, MIG வீடுகளைக் கட்ட கூடுதல் FSI திட்டத்தை குறிப்பிட்டும் செய்தி வெளியிட்டுள்ளன.

The New Indian Express நாளிதழ் தனது செய்தியில் “Infrastructure push in surplus budget” என்ற தலைப்பில் “Keeping Chief Minister’s vision for development in focus; the State Government proposed new taxes to mop up Rs.1500 crores, but spares the aam aadmi” அதாவது, சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் 1500 கோடி ரூபாய் வருவாய் திரட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குடன் கூடிய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரும் நிதி நிலை அறிக்கை என்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதே பத்திரிகையில் FICCI தெரிவித்துள்ள கருத்தாக “Proactive, balanced, and people friendly budget” என்ற கருத்தையும் பதிவு செய்துள்ளது.

The Hindu நாளிதழ் “Thrust on development in welfare budget” என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டதோடு “Continued impetus to mega city plan – Record sum allocated to school education” என்ற தலைப்பில் நிதி நிலை அறிக்கையைப் பற்றி கருத்துகளைத் தெரிவித்துள்ளது.

தினத்தந்தி நாளிதழ் ‘‘பட்ஜெட்டின் ஒவ்வொரு வரியிலும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் எண்ணங்களும், திட்டங்களும், ஆலோசனைகளும், ஆக்கப்பூர்வமான சிந்தனைகளும் மிளிர்கின்றன” என்று தெரிவித்து, “தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் முதலிடத்திற்கு கொண்டு செல்வதற்கான தொலைநோக்குத் திட்டம் 2023 என்ற ஆவணத்தை சில நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் பிரகடனப்படுத்தினார். அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்பதை இந்த பட்ஜெட் பகிரங்கப்படுத்துகிறது என பாராட்டியுள்ளது.

அதேபோல் தினமலர் போன்ற பல்வேறு நாளிதழ்களும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களைப் பற்றி கருத்துக்களை வெளியிட்டுள்ளன. இந்த பத்திரிகைகளில் எல்லாம் நிதிநிலை அறிக்கைபற்றி எதிர்மறை விமர்சனங்கள் எதுவும் இல்லை. அதேபோல் CII, FICCI போன்ற தொழில் கூட்டமைப்பு நிறுவனங்களும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று கருத்துகள் தெரிவித்துள்ளன. இவர்களின் கருத்துக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தினுடைய வளர்ச்சித் திட்டங்களுக்கும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் போதிய நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள் என்ற கருத்தினை இங்கே பதிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனது தலையாயக் கடமையாக ஏற்றுக்கொண்டிருப்பது மின்சார பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே.

ஒளி விளக்காம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே, ஒளிமயமாக இருந்த தமிழகம், இதயமே இல்லாத மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருண்டு போனது. அந்த இருளை அகற்றுகின்ற சவாலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இயற்கையின் சீற்றத்தையே எதிர்கொண்டு ஜெயித்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இதிலும் ஜெயிப்பார்! எதிலும் ஜெயிப்பார்! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மதி நுட்பமும், திறமையும், அறிவும், ஆற்றலும் மின் உற்பத்தியில் தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக மிகை மாநிலமாக மாற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை உறுதியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்களுக்கும் விரிவான விவரங்களைத் தந்துள்ளோம். துறைவாரியான மானியக் கோரிக்கைகளும் தொடர்ந்து இந்த அவை முன் வைக்கப்படவுள்ளன. இதில் துறை சார்ந்த பல அறிவிப்புகளும் இடம்பெற உள்ளதால் மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்ற அறிவிப்புகள் அவற்றில் இடம்பெற வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு, தமிழக மக்களின் மேம்பாட்டிற்கு, ஏழை, எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தன்னிகரற்ற இந்த அரசு அரும்பாடுபட்டு வருகின்றது. நான் பலமுறை எடுத்துக் கூறியபடி மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும், தொடர்ந்து வளர்ச்சிப் பணிகளை, குறிப்பாக, கட்டமைப்புகளை மேம்படுத்தி வளர்ச்சியைத் தூண்டக்கூடிய பணிகளுக்கு முன்னுரிமை அளித்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படும்.

இந்த சட்டமன்றத்தில் அன்று சவால்விட்ட எதிர்க்கட்சிகளைப் பார்த்து “உங்களுக்குத் திராணி இருந்தால் சங்கரன்கோயிலில் சந்தியுங்கள்'' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். நம் நாடு படத்தில் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் “பொய்யும் புரட்டும் துணையாய் கொண்டு பிழைத்தவரெல்லாம் போனாங்க” என்று பாடுவார்கள். அதுபோலவே பொய்யும், புரட்டும் துணையாய் கொண்டு போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் டெப்பாசிட்கூட வாங்க முடியாமல் தோல்வியைத் தழுவினார்கள். அன்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் சவால் விட்டவர்களைப் பார்த்து இன்று சந்தியும் சிரித்துக் கொண்டிருக்கிறது, சங்கரன்கோயிலும் சிரித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை புழுதி வாரி தூற்றியவர்களை எல்லாம் அந்த புழுதியே புயலாக மாறி தூக்கி வீசி எறிந்து வரலாறு படைத்துவிட்டது.

சங்கரன்கோயில் இடைத் தேர்தலில் மக்கள் அளித்த முடிவு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு செல்கின்ற பாதை சரியான பாதைதான் என்று உறுதிப்படுத்தியுள்ளது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என ஏற்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில், அந்தப் பாதையில் தொடர்ந்து செல்வோம் என உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இமயத்தை தொட்டவர்கள் எல்லாம் ஜெயித்தவர்கள் அல்ல மக்களின் இதயத்தைத் தொட்டவர்கள் தான் ஜெயித்தவர்கள் என்று ஒரு அறிஞன் சொன்னான். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணுறக்கம் இல்லாமல் கடமையாற்றி தமிழக மக்களின் இதயங்களை தொட்டிருக்கின்றார். அதனால் இந்த நிதிநிலை அறிக்கை தமிழர்களின் தலை எழுத்தை மாற்றும் தமிழ்நாட்டின் தலைவிதியையும் மாற்றும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே எங்கள் கண் கண்ட தெய்வம்! எங்களுக்கென்று தனி சொந்தம் இல்லை! மாண்புமிகு அம்மா அவர்களின் சொந்தமே எங்கள் சொந்தம்! எங்களுக்கென்று தனி நட்பு இல்லை! மாண்புமிகு அம்மா அவர்களின் நட்பே எங்கள் நட்பு! எங்களுக்கென்று தனி

சிந்தனை இல்லை! மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையே எங்கள் செயல்!

எங்களுக்கென்று தனி வழி இல்லை, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியே எங்கள் வழி. தமிழர்தம் மேம்பாடே குறிக்கோளாய், தமிழகத்தின் முன்னேற்றமே இலட்சியமாய் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் தத்தம் செய்தோம். எங்கள் உடல், பொருள் ஆவி அனைத்தும் தத்தம் செய்தோம் என்று வாழ்ந்துவரும் ஒன்றரை கோடி தொண்டர்களில் ஒரு எளிய தொண்டனான என்னை, பெற்ற தாயினும் மேலாக பேரன்பு காட்டி, தமிழகத்தின் நிதி அமைச்சராக்கி, பாரம்பரியம் மிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் இரண்டாம் முறையாக நிதிநிலை அறிக்கையை அளித்திடும் வாய்ப்பினை அருளி, அதன் தொடர்ச்சியாக அந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு இன்று பதிலுரையை வழங்குகின்ற அரிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களில் எனது நன்றி மலரைக் காணிக்கையாக்கி எனது பதிலுரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.